தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 6-1-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை த்'களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மாறிவரும் சூழலுக்கேற்ற தொழில்நுட்பங்களை உழவர்கள் பயன்படுத்த வேண்டும் - வேளாண் துணைவேந்தர் அறிவுரை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வளங்குன்றா மற்றும் இலாபகரமான வேளாண்மை என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில் தென்னிந்திய வேளாண்மைக் கருத்துக்காட்சி மற்றும் உழவர் தினவிழா சனவரி 6-9, 2015 (நான்கு நாட்கள்) வரை நடைபெறுகிறது. இதன் துவக்க விழா இன்று (6-1-2015) பல்கலையின் பட்டமளிப்பு விழா அரங்கில் நடைபெற்றது. இக்கருத்துக்காட்சியில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா, சீமாந்திரா, புதுச்சேரி உள்ளிட்ட மாநில மற்றும் யூனியன் பிரதேசத்திலிருந்து விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இக்கருத்துக்காட்சியின், துவக்க விழாவில் முனைவர் கா.அ. பொன்னுசாமி, விரிவாக்கக் கல்வி இயக்குநர் அவர்கள் வரவேற்புரையாற்றினார். அதன் தொடர்ச்சியாக வேளாண் உற்பத்தியை இருமடங்காக்குவோம், உழவரின் வருவாயை மும்மடங்காக்குவோம் என்ற தலைப்பில் உயிர்த்தொழில்நுட்ப வாழை சாகுபடி குறித்த குறும்படக் காட்சி திரையிடப்பட்டது.

முனைவர் ஒ.பி. தஹியா, இயக்குநர், பண்ணைத் தகவல், மத்திய வேளாண் அமைச்சகம், புதுதில்லி அவர்கள் தனது சிறப்புரையில் கூறியதாவது, மத்திய வேளாண் அமைச்சகமானது, மாநில விரிவாக்க இயக்கங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து கருத்துக்காட்சி, குறும்படங்கள், பயிற்சிகள் மூலம் வேளாண்

தொழில்நுட்பங்களை உழவர்கள் அறிந்துகொள்ள முக்கிய பங்காற்றுகிறது என்று கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் தனது தலைமையுரையில், இதுபோன்ற கருத்துக்காட்சிகளின் வழியாக இதுவரையில் நாம் செய்த ஆராய்ச்சிகளின் மூலம் உருவான தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறியவும், அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை விஞ்ஞானிகள் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ள ஏதுவாகிறது என்று கூறினார். இந்தியாவின் மொத்த ஆராய்ச்சிக்கு செலவிடும் தொகையில் ஒரு சதவிதம்தான் வேளாண் ஆராய்ச்சிக்கு ஒதுக்கப்படுகின்றது. தமிழகத்தில் கடந்த வருடம் 11 மாவட்டமும், முந்தைய வருடம் 31 மாவட்டமும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டாலும், 113 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி இலக்கை சாதித்தது. வறட்சியிலும் இருமுறை பாசனம் செய்து 55 நாளில் விளையக்கூடிய கோ 8 பாசிப்பயறு, மக்கள் மத்தியில் வரவேற்பு பெற்று தமிழகம் பயிர் உற்பத்தியில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. மென்பொருள் பொறியாளர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப பொறியாளர்கள் கூட தற்போது வேளாண்மை தொழில் செய்வதில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். வெற்றி பெற்ற விவசாயிகள் அதன் நுணுக்கங்களை மற்ற ஏழை விவசாயிகளுக்கும் தெரிவிக்க வேண்டும் என்றும் கூறினார்.

திரு. கருப்பையா அவர்கள் வாழை சாகுபடியில் ஈடுபடுவோருக்கு ஒரு ஏக்கருக்கு 1.25 இலட்சம் ரூபாய் அவரே கொடுத்து தொழில்நுட்பங்களையும் கூறி சந்தைப்படுத்தவும் உதவி செய்கிறார். குறைந்தது ஒரு ஏக்கருக்கு 2 இலட்சம் ரூபாய் சம்பாதித்து இலாபம் ஈட்ட முடியும் என்றார். மாறிவரும் பருவ சூழலில் உணவு முறை மாற்றத்திற்கு ஏற்ப தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

திரு. சி. இராஜேந்திரன், இணைச் செயலர், வேளாண் துறை, தமிழக அரசு அவர்கள் தனது துவக்கவுரையில் உற்பத்தியை இருமடங்காக்குதல், வருவாயை மும்மடங்காக்குதல் என்னும் கொள்கையுடன் அரசு செயல்படுகிறது என்று கூறினார். மேலும். வேளாண் பல்கலைக்கழகம் மண், நீர், பயிர்த்தொழில்நுட்பங்களை தருகிறது. இதனை பயன்படுத்தி மாநிலத்தை உலகிலேயே வேளாண்மை மையமாக மாற்ற வேண்டும் என்றார். வாழை உற்பத்தியில் 165 டன் ஒரு எக்டர் என்ற உயர்ந்த மகசூல் தமிழகத்தில் பெற்று இந்தியாவிலேயே முதன்மையிடம் வகிக்கிறது என்றார். விவசாயிகள் வெற்றி பெற்றால்தான் நாடு வல்லரசாக முடியும் என்றார். எல்லா சூழ்நிலைகளையும் தாங்கி உற்பத்தி இலக்கை எட்டி தமிழகம் இருமுறை மத்திய அரசு வழங்கும் கிரிஷி கர்மன்

விருதும், அக்ரிகல்ச்சர் டுடே, இந்திய டுடே ஆகியோர் வழங்கும் விருதும் பெற்றுள்ளது. மதிப்புக்கூட்டல் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் ஆகியவை வருங்காலத்தில் ஊக்குவிக்கப்படும். அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து மக்களுக்காக பாடுபடும் துணைவேந்தர்களில் இந்தியாவிலேயே பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று பாராட்டினார். அத்தகைய ஒரு வீரிய முயற்சியையும் வழிகாட்டுதலையும் முறையாக ஏற்று விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

முன்னதாக, திரு. ஆர். இராமகிருஷ்ணன், துணை இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, கோயம்புத்தூர், திரு. சா. சங்கரன், செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, கோயம்புத்தூர், திரு. வி. வின்செண்ட் மனோகரன், வேளாண் இணை இயக்குநர், வேளாண்மைத் துறை, கோயம்புத்தூர், முனைவர் எஸ்.இ.எஸ்.ஏ. காதர், திட்ட ஒருங்கிணைப்பாளர், மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர், முனைவர் பக்ஷிராம், இயக்குநர், கரும்பு இனப்பெருக்க நிறுவனம், கோயம்புத்தூர், திரு. எம். இராதாகிருஷ்ணன், இயக்குநர், விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று துறை, கோயம்புத்தூர், திரு. சண்முகசுந்தரம், வேளாண் பல்கலை மேலாண்மைக்குழு உறுப்பினர் ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அதில் அடர் நடவு முறை, துல்லிய பண்ணையம், பசுமைக்குடில் பயிர் உற்பத்தி, பண்ணை இயந்திரங்கள் பயன்பாடு, சூரியசக்தி பயன்பாடு, ஒருங்கிணைந்த பண்ணை மேலாண்மை ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும் என்று கூறினார்.

முன்னதாக, வேளாண் தொழில்நுட்பக் கருத்துக்காட்சி திரு. சி. இராஜேந்திரன், இணை செயலர், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இறுதியாக, முனைவர் ம. மகேஸ்வரன், ஆராய்ச்சி (இயக்குநர்), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் நன்றியுரை நல்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்